# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 June - 2019 Issue - 6


ஆசிரியர் உரை

## இரவலாகக் கொடுக்கப்பட்ட கனம்

**ப**ரலோகத்தின் தேவனால் மானிடராகப் படைக்கப்பட்டுள்ள நாம் நம்முடைய குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும் பிறரை உயர்வாகவும், மேன்மையாகவும் கருதுகிறோம் என்பதை வெளிப்படுத்துவதற்குப் பல சிறப்பு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம். அவைகளுள் மதிப்பு, மரியாதை, கனம் போன்றவை குறிப்பிடத்தக்கவைகள். இதில் மதிப்பு, மரியதை மனிதர்கள் சம்பந்தப்பட்டதாகவும், **கனம்** கடவுள் சம்பந்தமானதாகவும் பெரும்பாலும் இருக்கும். விதிவிலக்காக, சில சந்தர்ப்பங்களில் **கனம்** என்பது சில மனிதர்களுக்காக சில மனிதர்களால் எடுத்துக் கையாளப்பட்டாலும் அது பொது விதி அல்ல.

ஆம், **கனம்** என்னும் உயரிய பொருளைக் கொண்ட வார்த்தை வேதாககமத்தில் பெரும்பாலும் தேவனுக்கானதாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுண்மையை உறுதிசெய்யும் வசனங்கள் இதோ. **மகிமையும் கனமும் அவர் சமூகத்தில் இருக்கிறது, வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது** [சங்.96:6]. **நான் பிதாவானால் என் கனம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்...** [மல்கியா1:6]. **குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்** [யோவான் 5:23]. **கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்...**[வெளி.4:11].

இப்படி பரிசுத்த வேதாகமத்தில் கனம் தேவனுக்கே உரித்தானதாகக் காணப்பட்டாலும், தன்னுடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதனுடைய குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும் மிகுந்த கரிசனை காட்டும் நம் தேவன், தனக்கே உரிய இவ்வார்த்தை மனிதனோடும் சம்பந்தப்படும்படியாக பரிசுத்த ஆவியானவருக்கு அனுமதி அளித்திருக்கிறதை நாம் கவனிக்க முடியும். ஆம், **கனம்** பரத்திலிருந்து மனிதனுக்கு இரவலாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. **உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக** என்று பழைய, புதிய ஏற்பாடுகளில் வலியுறுத்தியுள்ளார் [யாத். 20:14; எபே.6:2]. ஆம், குடும்ப வாழ்வின் நலனுக்காகத் தனக்கே உரிய **கனம்** என்னும் வார்த்தையை மனிதனுக்குத் தேவன் இரவலாகக் கொடுத்திருக்கிறார். அடுத்து, **முதிர் வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போலவும்.. முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும் பாவித்து... உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு** [1தீமோ. 5:1-3] போன்ற வசனங்கள் மனிதனுடைய சமுதாய வாழ்வின் நலனுக்காக, **கனம்** தேவனால் இரவலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை நமக்கு உணர்த்துகிறது.

இன்னும், **கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்** [ரோமர் 12:10]. **நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை விசேஷமாகத், திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப் படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும்** [1 தீமோ. 5:17]. **ஆனபடியினாலே நீங்கள் கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷத்தோடே அவனை ஏற்றுக்கொண்டு, இப்படிப்பட்டவர்களைக் கனமாய் எண்ணுங்கள்** [பிலி.2:29] போன்ற வசனங்கள், தேவ மனிதர்களின் ஆன்மீக வாழ்வின் மேம்பாட்டுக்காக இரவலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை ஐயத்திற்கிடமின்றிச் சொல்லுகிறது.

இந்தக் கனம் என்னும் வார்த்தை மனத வாழ்க்கையோடு முதன்முதல் சம்பந்தப்படும் வசனம் யாத்திராகமம் 20:12 - ல் உள்ளது. தொடர்ந்து செல்வதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படி இவ்வசனத்தின் பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

**யாத்திரை** என்றால் **பயணம்** அல்லது **பிரயாணம்**. ஆக, யாத்திராகமம் ஒரு பயணம் பற்றிய நூல். அப்படியானால், அது யாருடைய பயணம்? எப்பொழுது நடந்த பயணம்? எங்கே போகும் பயணம்? என்ற கேள்விகள் வருகிறது. தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டு அழைக்கப்பட்ட ஆபிரகாமின் சந்ததி, யாக்கோபின் நாட்களில் ஆகாரத் தேவைகளுக்காக அடைக்கலம் தேடி, அன்றைக்குச் செழிப் போடிருந்த எகிப்து தேசத்திற்குச் சென்றதை வேதத்தில் வாசிக்க

முடியும் (ஆதி. 42–50 அதிகாரங்கள்). யோசேப்பு எகிப்து தேசத்தின் இரண்டாம் நிலையிலிருந்தபோது, சிறப்பாக வாழ்க்கையைத் துவக்கியவர்கள், யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் தோன்றினபோது (யாத்.1:8) சீரழியத் தொடங்கினர். ஒரு கட்டத்தில் கொடுமை உச்சத்தைத் தொட்டபோது, அவர்களின் வேதனைகளை அறிந்து, அழுகுரலைக் கேட்ட தேவன், அவர்களை மீட்டு வாக்குத்தத்த கானானுக்குள் சேர்க்கும்படி மோசையை அழைத்துப் பணித்தார் (யாத். 3:1–10).

***ஓர் ஆரோக்கியமான உறவுக்கு மரியாதைதான் மூலைக்கல்லாக உள்ளது. ஒருவரிடமிருந்து ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காகச் செய்யப்படும் பாசாங்கு அல்ல மரியாதை. மாறாக, சம்பந்தப்பட்டவருக்கு நாம் கொடுக்கும் ஒட்டுமொத்த அங்கீகாரமே மரியாதை.***

மிகுந்த தயக்கத்தோடும், சாக்குப்போக்குகளோடும் சவாலான பணியை ஏற்றுக்கொண்ட மோசே, பார்வோனின் முரட்டுப் பிடிவாதத்தை தேவபெலத்தோடு எதிர்த்து நின்று இஸ்ரவேலை விடுவித்து, செங்கடலைப் பிளந்து அழைத்து வந்தான் (யாத். 14:21,22). கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டபோது **கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும், கர்த்தருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்** (யாத்.14:31). பிறகு, மோசே சிவந்த சமுத்திரக் கரையிலிருந்து அவர்களைக் கிளப்பி பயணத்தை மேற்கொண்ட போது, சூர் வனாந்திரத்தில் தண்ணீர் இல்லாமற்போனபடியால், தங்கள் தேவ விரோத விளையாட்டுக்குத் **தாயம்** போட்டு விட்டார்கள். ஆட்டம் ஆரம்பமாகி விட்டது. ஆம், கர்த்தரிடத்திலும், மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தவர்கள், ஒரு மூன்று நாளுக்குள்ளாக முறுமுறுக்கத் தொடங்கினர் (யாத். 15: 22,23). தண்ணீருக்காக முறுமுறுத்தவர்கள், சீன் வனாந்திரத்திற்கு வந்தபோது, இறைச்சிக்காகவும், அப்பத்திற்காகவும் கூப்பாடு போட ஆரம்பித்துவிட்டார்கள். கர்த்தர் வானத்திலிருந்து மன்னாவையும் காடைகளையும் கொடுத்தும், கர்த்தர் விதித்த கட்டளையை அவர்கள் கைக்கொள்ளாமற் போனார்கள் (யாத். 16:28).

இஸ்ரவேலரின் பிரயாணம் இரண்டு மாதங்களைக் கடந்து, மூன்றாம் மாதம் துவங்கின நிலையில், தன்னுடைய ஜனங்களைக் ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவர தேவன் விரும்பினார். பல தலைமுறைகள் எகிப்தில் அவர்கள் எவ்வித ஆன்மீகக் கோட்பாடுகளுக்கும் உட்பட்டு வாழ்ந்து பழகாத படியாலும், தான்தேன்றித்தனம் என்பது அவர்கள் பெற்றெடுத்த சவலப் பிள்ளையாக இருந்தபடியாலும், இன்னும் அவர்களை வழிநடத்தின இரண்டு மாத அனுபவம் ஏடாகூடமாக

இருந்த படியாலும் அவர்களை நெறிப்படுத்த தேவன் திட்டமிட்டு ஆயத்தப் படுத்தினார். அந்த ஆயத்த நாட்கள் அறிவுரைகளோடும், கடுமையான எச்சரிப்புகளோடும் பயங்கரக் காட்சிகளோடும் இருந்தது (யாத்.19-ம் அதிகாரம்). இப்படித்தான் தேவன் பத்துக் கட்டளை களையும், பிற பிரமாணங்களையும் கொடுத்தார். புரிகிறதா?

புகழ்பெற்ற இந்தக் பத்துப் கட்டளைகளில் முதல் நான்கு மனிதனுக்கும், தேவனுக்கும் இடையிலான உறவு எப்படி இருக்க வேண்டுமென்று பேசுகிறது. அடுத்த ஆறு மனிதனுக்கும், மனிதர்களுக்கும் இடையேயான உறவு எப்படி இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லுகிறது. அந்த ஆறிலே முதலாவதாக வருவது தான், **உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக** (யாத். 20:12) என்பது. தகப்பனுக்கும், தாய்க்கும் தேவன் எந்தாளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள இதைவிடப் பெரிய சான்று தேவையில்லை. தனக்கே உரிய கனத்தை முதன்முதலாக தகப்பனுக்காகவும் தாய்க்காகவும் **தான் இரவலாகக் கொடுத்தார்.** மானிட வாழ்வில் பெற்றோர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பது இப்பொழுதாவது உங்களுக்குப் புரிகிறதா? புரிந்தால் நல்லது.

ஆயினும், சமுதயத்தின் மத்தியில் பெற்றோர்கள் இந்தளவு முக்கியத்துவம் பெற்றவர்களாகக் காணப்படுகிறார்களா? குறைந்த பட்சம், கிறிஸ்தவக் குடும்பங்களிலாவது பெற்றோர்களுக்குக் கிடைக்க வேண்டிய கனம் கிடைக்கிறதா? இதற்குப் பதில் நிச்சயமாக இல்லை என்பதே. தாங்கள் எந்த வகையிலும் பிள்ளைகளால் கனப்படுத்தப்படுவ தில்லையென்பதினால் தான் பெற்றோர்களின் கவனம் முதியோர் இல்லத்தை நோக்கித் திரும்பியிருக்கிறது. இன்றைக்கு முதியோர் காப்பகங்கள் பெருகி வருவதற்கு வேறென்ன காரணம்? பெரும்பாலான குடும்பங்களில் தேவபோதனை பகிரங்கமாக மீறப்படுகிறது! அப்படி மீறப்படுவது அவர்களின் வாழ்நாளுக்கும், அவர்களின் சுகவாழ்வுக்கும் தீமையை வருவிக்கக்கூடியது என்ற புரிந்துகொள்ளுதல் கூட இல்லாமலிருப்பது ஆச்சரியமாக உள்ளது.

சரி, இப்படி சமுதாயமும், கிறிஸ்தவக் குடும்பங்களும் அவலத்திலிருப்பதற்கான பிரதான காரணம் **கனம்** என்ற வார்த்தையின் உள்ளான பொருள் தெரியாததே. **ஆனால், தகப்பனையும், தாயையும் கனப்படுத்து** என்று வேதவசனங்களின் மூலம் கட்டளையிடும் அதே தேவன், **கனம் என்பது எப்படியிருக்க வேண்டுமென்ற விளக்கத்தையும்** அதே வசனங்களில் கொடுத்திருக்கிறார். ஆகவே, கனம் என்பது எவைகளோடெல்லாம் சம்பந்தப்படுகிறது என்று கவனித்து நம்முடைய நல்வாழ்வுக்கான பாடங்களைக் கற்றுக் கொள்வோம். சரியா?

### 1. ***கனம்*** என்பது மரியாதை கொடுப்பது

தனக்கே உரிய கனத்தைத் தகப்பனுக்கும் தாய்க்கும் இரவலாகக் கொடுத்திருக்கும் தேவன், அந்தக் கனத்தோடு தமது வசனங்களில் சம்பந்தப்படுத்தியிருக்கும் பொருள்களில் முதலாவது நம்மால் கவனிக்க முடிவது **மரியாதை**

**மரியாதை கெட்ட உலகில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் மரியாதையாக ஒத்துக்கொள்ள வேண்டும்.** ஏனெனில், மரியாதை என்றால் என்ன என்று கேட்கக்கூடிய ஒரு சமுதாயத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். மரியாதை என்பது கானல் நீர் போல் தோன்றும், கிட்டப்போனால் ஏமாற்றமே மிஞ்சும். எல்லா மட்டங்களிலும் இதுதான் நிலை. நாம் ஏற்றுக் கொள்ளத் தயங்கினாலும், மறுத்தாலும் இதுதான் யதார்த்தம்.

மனிதன் போக்கு இப்படித்தான் இருக்கும் என்பதைத் தேவன் அறிந்துதான், மரியாதைக்கு வித்திடும் கனத்தை குடும்பத்திலிருந்து ஆரம்பிக்கிறார்..... **உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக** என்று (யாத்.20:12). இங்கே மறுபடியும் ஒன்றைச் சொல்லுகிறேன், பிரமாணங்களே இல்லாத காலத்தில் வாழ்ந்த தன்னுடைய ஜனங்களுக்கு பிரமாணங்களைக் கொடுத்தபோது, மனிதன் மனிதனோடு சம்பந்தப்படும் முதல் பிரமாணமாக பெற்றோர்களுக்கான கனம் வருகிறது.

சரி, **கனம்** என்பது **மரியாதை** சம்பந்தப்பட்டதென்று லேவியராகமம் 19:32 நமக்கு எடுத்துரைக்கிறது. கவனியுங்கள். **நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்.** பொதுவாக, யாருக்கு முன்பாக ஒருவர் எழுந்து நிற்பார்? யாருக்கு மரியாதை கொடுக்க ஒருவர் விரும்புகிறாரோ அவருக்கு முன்பாகத்தானே. கனம் என்பது மரியாதை சம்பந்தப்பட்டது என்பதை நாம் புதிய ஏற்பாட்டிலும் பார்க்க முடியும். பேதுரு ஆசிரியர், **ராஜாவைக் கனம் பண்ணுங்கள் என்கிறார்.** (1பேதுரு 2:17). அப்படியானால், கனத்திற்குரிய ராஜாவுக்கு மரியாதை கொடுக்க வேண்டியது அவசியம் தானே.

அருமையானவர்களே! நம்முடைய குடும்பங்களிலும், சபைகளிலும், சமுதாயத்திலும் மரியாதை கொடுத்து கனப்படுத்தப்பட வேண்டிய பெற்றோர்களின் நிலை எந்தளவில் உள்ளது? உண்மை யாகவே உரிய மரியாதையுடன் அவர்கள் நடத்தப்படுகிறார்களா? **ஓர் ஆரோக்கியமான உறவுக்கு மரியாதைதான் மூலைக்கல்லாக உள்ளது.ஒருவரிடமிருந்து ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொள் வதற்காகச் செய்யப்படும் பாசாங்கு அல்ல மரியாதை. மாறாக, சம்பந்தப்பட்டவருக்கு நாம் கொடுக்கும் ஒட்டுமொத்த அங்கீகாரமே மரியாதை.**

அப்படிப்பட்ட உரிய அங்கீகாரம் பெற்றோர்களுக்குக் குடும்பங்களில் கிடைக்கிறதா? போதுமான மரியாதை உண்டா? பிள்ளைகளுக்கு மத்தியில் கனப்படுத்தப்படுகிறார்களா? பெரும்பாலான

குடும்பங்களில், அவர்கள் கூடுதல் சுமையாகத்தானே பார்க்கப்படுகிறார்கள். போடுகிற சாப்பாட்டைத் தின்றுவிட்டு வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்றல்லவா பிள்ளைகளாலும், பேரப் பிள்ளைகளாலும் கட்டளையிடப்படுகிறார்கள்! இதுவா தேவன் கொடுக்கச் சொல்லும் கனம்?

## II. ***கனம்*** என்பது கீழ்ப்படிந்து நடப்பது

தனக்கே உரிய கனத்தை தகப்பனுக்கும், தாய்க்கும் இரவலாகக் கொடுத்திருக்கும் தேவன், அந்தக் கனத்தோடு தமது வசனங்களில் சம் பந்தப்படுத்தியிருக்கும் பொருள்களில் இரண்டாவதாக நம்மால் கவனிக்க முடிவது **கீழ்ப்படிதல்.**

கீழ்ப்படிதல் என்பது ஒருவருடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுச் செயல்படுதல். கீழ்ப்படிதலுக்குப் பரலோகத்தின் தேவன் அதீத முக்கியத்துவம் கொடுக்கிறார். தேவனைப் பற்றிய இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளாமல் தப்புக்கணக்குப் போட்டு காரியமாற்றி விட்டு, தப்பிக்க நினைத்த சவுல் ராஜாவுக்குத் தேவன் சாமுவேல் மூலமாகக் கொடுத்த பதிலைப் பாருங்கள். **கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப் படிகிறதைக் காட்டிலும் சர்வாங்கதகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தாலும் உத்தமம்** [1சாமுவேல்.15:22] என்று.

இப்படிக் கீழ்ப்படிதலைக் கறாராக எதிர்பார்க்கும் தேவன், இந்தக் கீழ்ப்படிதலை **கனத்தோடு** சம்பந்தப்படுத்தியிருக்கிறார். கீழ்ப்படிதல் இல்லையேல் கனம் இல்லை. இதைப் புரிந்துகொள்ள இவ்வசனத்தைக் கவனியுங்கள். **இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு** [எண். 27:20]. புரிகிறதா? ஜனங்கள் மோசேக்குக் கீழ்ப்படிந்தது போல் யோசுவாவுக்கும் கீழ்ப்படியும்படிக்கு மோசே தன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடுக்கும்படி தேவன் சொல்லுகிறார். மல்கியாவின் நாட்களில் தனக்குக் கீழ்ப்படியாமற்போன ஆசாரியர்களைப் பார்த்து, **நான் பிதாவானால் என் கனம் எங்கே?** [மல்கியா 1:6] என்று தேவன் கேட்டார். விளங்குகிறதா? கீழ்ப்படிதலும், கனமும், ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிள்ளைகள் என்பது.

இப்படிக் கீழ்ப்படிதலைக் கனத்தோடு கட்டி வைத்திருக்கும் தேவன் தான், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்று குறிப்பிடுகிறார். அதாவது, பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டு மென்று கூறுகிறார். முற்பிதாக்களில் மூன்றாமவராகிய யாக் கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் கீழ்ப்படிந்து நடந்து கொண்டதை தேவன் தமது வசனங்களில் வெளிப்படுத்தியுள்ளார் [ஆதி.28:7]. இதே கருத்தைப் பவுலடியார் இன்னும் நேரிடையாக இவ்விதம் கூறுகிறார். **பிள்ளைகளே உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது** [கொலோ.3:20] என்று.

அப்படியானால், அன்பானவர்களே! கர்த்தருக்குப் பிரியமான பெற்றோர்களுக்கான கீழ்ப்படிதல் நம்முடைய குடும்ப வாழ்வில் எங்ஙனம் உள்ளது? மேலும், எபேசியரில் **பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்** [எபேசியர் 6:1] என்கிறாரே பவுல். நியாயத்தை நடப்பிக்கவும், கர்த்தருக்குப் பிரிய மானதைச் செய்யவும் நாம் தயாரா? ஏதோ இது இளம் பிள்ளைகளுக்கான ஆலோசனை என்று இளம் வயது பெற்றோர் ஏனோதானோவென்று இருக்க வேண்டாம். வயது முதிர்ந்த நிலையில் நம்மால் மூலையில் தள்ளிவிடப்பட்டு இருக்கும் பெரியவர்களும் பெற்றோர்களே! அவர்களுடைய சொல்லுக்கும் மரியாதை கொடுத்து, நாம் அவர்களை அங்கீகரித்து மதித்து நடக்க வேண்டியது அவசியம். தேவன் எல்லாவற்றையும் கவனிக்கிறார். தேவ பார்வையில் நியாயமான இச்செயலையும், கர்த்தருக்குப் பிரியமான காரியத்தையும் நாம் செய்வோமானால், வாழ்நாள் நீடிக்கும், நம் வாழ்வு செழிக்கும்.

## III. ***கனம்*** என்பது பொருளாதாரத்தில் உதவுவது

தனக்கே உரிய கனத்தைத் தகப்பனுக்கும் தாய்க்கும் இரவலாகக் கொடுத்திருக்கும் தேவன், அந்தக் கனத்தோடு தமது வசனங்களில் சம் பந்தப்படுத்தியிருக்கும் பொருள்களில் மூன்றாவதாக நம்மால் கவனிக்க முடிவது **பொருளாதார நன்மைகள்.**

கனம் என்பதற்கும், பொருளாதார நன்மை செய்வதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று நீங்கள் எண்ணக்கூடும். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், பெரிதாகத் தொடர்பு இருப்பது போல் தெரியாது தான். ஆயினும், வசனங்களண்டை நாம் நெருங்கிப்போய் பார்க்கும் போது புரிய வேண்டியது புரிய மனமிருந்தால் புரியும். கவனியுங்கள்! **உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு** [I தீமோ. 5:3] என்றும், **நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்** [I தீமோ.5:17] என்றும் கூறுகிறார் பவுல். இங்கே வேத வசனங்கள் கூறும் **கனம்** என்பது **மரியாதை** மற்றும் **கீழ்ப்படிதலோடு** நின்று போகாமல், **பொருளாதார ரீதியாக** அவர்களைத் தாங்குவது சம்பந்தமாகவும் பேசப்பட்டுள்ளது. ஆம், விதவைகளைப் கனம் பண்ணுதல் என்பது போகும்போதும் வரும் போதும் அவர்களுக்குச் சலாம் போடுவதோ அல்லது ஸ்தோத்திரம் சொல்லுவதோ அல்ல. மாறாக, சம்பந்தப்பட்டவர்களின் சரீரத் தேவைகளைச் சந்திப்பதையும் உள்ளடக்கியது.

அப்படியானால், உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணு என்று தேவன் சொல்லுவதின் பொருள் என்ன? தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கியவர்களின் சரீரத் தேவைகளை விசாரித்துச் சந்திக்க வேண்டுமென்பதே! அவர்கள் கேட்கிறார்களோ இல்லையோ, நாம்

வலியப்போய் கேட்டு தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். பசியாலும், வியாதியாலும், வஸ்திரமில்லாமலும், காவலிலும் இருந்த யாரோ ஒருவருக்குச் செய்த உதவிகளை இயேசு ஆண்டவர், **அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்று (மத்.25:40) பாராட்டும்போது, பெற்றெடுத்த தாய்க்கும், தகப்பனுக்கும் தேவையில் உதவி செய்வதைப் பிதாவாகிய தேவனும், இரட்சகராகிய இயேசுவும் எனக்கே செய்தீர்களென்று உச்சி முகர்ந்து நம்மை ஏற்றுக் கொள்ளமாட்டார்களா? சொல்லுங்கள். தேவ போதனை இப்படி இருக்கும்போது, பெற்ற தகப்பனையும், தாயையும் ஏன் நாம் அற்பமாக எண்ணுகிறோம்? பாரமாக நினைக்கிறோம்? அவர்களுக்குச் செய்வதை வீண் என்று சொல்லுகிறோம்? நாம் குழந்தைகளாக இருந்தபோது, நம்முடைய பெற்றோர்கள் இன்றைக்குப் அநேகராகிய நாம் நினைப்பது போல் எண்ணியிருந்தால், நம்முடைய நிலையும்,வாழ்வும் என்னவாயிருக்கும்? தேவன் தன்னுடைய கனத்தை அவர்களுக்கு இரவலாகக் கொடுத்து, பெற்றோர்களைக் கனப் படுத்துங்கள் என்று சொல்லுகிறார் என்றால், அதற்குச் சரியான முகாந்திரம் இருக்கிறதா? இல்லையா? பின்னே ஏன் சமுதாயத்தில் இந்த அவல நிலை? கிறிஸ்தவக் குடும்பங்களும் இதற்கு விதி விலக்காக இல்லையே.

இக்காரியத்தில் மனிதனின் அத்து மீறலுக்குக் கடிவாளம் போடத் தீர் மானித்த தேவன், இருபெரும் ஆசீர்வாதங்களை தாய் தகப்பனுக்கான கனத்தோடு இணைத்துவிட்டார். 1. இப்பூமியில் உன் வாழ்நாள் நீடித் திருக்க வேண்டுமா? தாய் தகப்பனைக் கனம்பண்ணு 2. இப்பூமியில் நீ நன்றாயிருக்க வேண்டுமா? பெற்றோரைக் கனம்பண்ணு என்று. இதுவும் புரியாத மக்குகளாக நாம் இருந்தால், நம்மை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. இங்கே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நாம் நம்முடைய பெற்றோர்களுக்கு என்ன செய்கிறோம் என்பதை நம்முடைய பிள்ளைகள் கவனிக்கிறார்கள். நாம் என்ன செய்கிறோமோ அதுதான் நாளை நமக்கும் செய்யப்படும். **மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்** (கலா. 6:7). வசனம் பொய்யாகாது.

ஆகையால், நம்முடைய தேவனின் தெளிவான, எளிமையான உப தேசத்தை சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொண்டு, இதுகாறும் இக்காரியத்தில் நாம் தவறு செய்கிறவர்களாக இருப்போமானால், அவைகளை உடனடியாகக் களைந்து போட்டு, தாய் தகப்பன்மார்களைக் கனப்டுத்தி வாழ்கிறவர்களாக மாறுவோம். அதன் மூலம் நாம் தேவச்சட்டத்திற்கும், தேவத்திட்டத்திற்கும் மதிப்பளிக்கிறவர்களாகத் தேவனுடைய பார்வையில் காணப்படுவோம். நிச்சயமாக அதற்குண்டான ஆசீர்வா தங்கள் உண்டு. தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்! ★

# தேவனுடைய பிரமாணம்

Bro. J.C. சோட்

பிரமாணம் அல்லது சட்டம் என்பது ஓர் ஆளுகை, அதிகாரம் மற்றும் ஒரு எல்லைக்குட்பட்ட பழக்கவழக்கங் களினால் ஏற்படுத்தப்படும் நடத்தை விதியாகும். இத்தகைய விதிகளின் ஒட்டுமொத்த அமைப்பும், இவ்விதிகளை அமுல் படுத்தக் கொண்டுவரப்படும் கட்டுப் பாடுகளும் பிரமாணம் அல்லது சட்டத்தில் உள்ளடக்கம். வேதாகமத்தில் பெரும்பாலும் பிரமாணம் என்பது மோசேயின் பிரமாணத்தையே குறிக்கிறது [யோவான் 1 :17]. புதிய பிரமாணம் அல்லது சட்டமாக இருந்தாலும் சரி, எல்லாமே தேவனிடத்திலிருந்து தான் ஆரம்பமாகிறது. அதுமாத்திரமல்ல, உபசட்டங்களும் தேவனைத் தான் ஆதாரமாகக் கொண்டுள்ளது. இவ்வுலகிலுள்ள கிராமங்கள், பட்டணங்கள் மற்றும் தேசங்களில் கடைபிடிக்கப்படும் சட்டங்கள் எல்லாமே தேவசட்டத்தை அடிப்படையாகக் கொண்டவைகள் தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆதியிலிருந்தே மனிதன் சட்டங்களால் ஆளப்பட வேண்டும் என்று எண்ணி மனிதனுக்கான சட்டங்களை இயற்றுவது தேவனுக்கு அவசியமாயிற்று. எனவே, தேவன், மனிதனுக்கான சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அவைகளை அவன் செய்யாவிட்டால் அல்லது செய்யத் தவறினால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று எச்சரித்தார். காலப்போக்கில், மனித இனம் வளர வளர தேவனுடைய பிரமாணங்கள் அல்லது சட்டங்கள் அதிகரித்தன. மனிதன் தன் சக மனிதர்களோடு ஒழுக்க ரீதியான உறவைத் தொடரவும், இது மனித நலனுக்கான தேவனுடைய சட்டங்களாயிருக்கின்றன.

**முற்பிதாக்களின் பிரமாணம்**

பழைய ஏற்பாட்டில் இரண்டு பிரதான பிரமாணங்கள் வெளிப்படுத்தப்பட்டன. முதல் பிரமாணம் முற்பிதாக்களின் பிரமாணம் என்று அழைக்கப்பட்டது. முற்பிதா என்பவர் ஒரு குடும்பத்திற்குத் தலைவராக இருந்தார். அப்படி முற்பிதாக்களாய் இருந்தவர்களிடத்தில் தேவன் பேசினார், அவர்கள் அந்த

வார்த்தைகளைக் குடும்ப அங்கத்தினர்களிடம் பகிர்ந்து கொள்வது வழக்கமாக இருந்தது. ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோர் நன்கு அறியப்பட்ட முற்பிதாக்களாக இருந்தார்கள். இந்த முற்பிதாக்களின் பிரமாணம் ஆதாமில் தொடங்கி மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படும் வரை சுமார் **2500** ஆண்டு காலம் வரை நீடித்தது. எபிரெய ஆசிரியர், **பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன்** என்று சொல்லும் போது இப்பிரமாணத்தைப் பற்றியே பேசுகிறார் (எபிரெயர் 1:1).

## மோசேயின் பிரமாணம்

பழைய ஏற்பாட்டில் பேசப்பட்டிருக்கும் அடுத்த பிரமாணம் மோசேயின் பிரமாணம் ஆகும். இப்பிரமாணம் யாத்திராகமம் இருபதாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது தேவன் மோசேயின் மூலம் பேசினதால் உண்டான பிரமாணமாகும். தேவன் மோசேயிடம் பத்துக் கட்டளைகள் உட்பட மனிதனுடைய ஒழுக்கரீதியான, சரீரப்பிரகாரமான, ஆவிக்குரிய வளர்ச்சிக்கான கட்டளைகளைக் கொடுத்தார். இது எழுத்தால் எழுதப்பட்ட பிரமாணமாயிருந்தது. இதில் முதல் பத்துப் பிரமாணங்கள் கற்பலகைகளிலும், அது சம்பந்தமான மற்ற பிரமாணங்கள் அனைத்தும் புத்தக வடிவத்திலும் கொடுக்கப் பட்டது. அவைகளை ஜனங்கள் தங்கள் இருதயமாகிய பலகையிலும் எழுத வேண்டியது அவசியமாயிருந்தது. மேலும், மோசேயின் பிரமாணம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டது. இது கிரியைகளை உள்ளடக்கிய பிரமாணமாக இருந்தது. ஜனங்கள் அப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், சரீரப்பிரகாரமான தண்டனை உடனே அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது. இப்பிரமாணம் மோசேயின் காலம் தொடங்கி, கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்தெழுதல் வரை அமுலில் இருந்தது. அதாவது, மோசேயின் பிரமாணம் சுமார் **1500** வருடங்கள் நீடித்திருந்தது.

அன்பின் அப்போஸ்தலன் இப்பிரமாணத்தைப் பற்றிச் சொல்லும் போது, **எப்படியெனில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின்** மூலமாய் உண்டாயின (யோவான் 1:17) என்று குறிப்பிடுகிறார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, **நியாயப் பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.**

**வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ள தெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று** சொன்னார் (மத்தேயு 5:17, 18). கிறிஸ்து சொன்னபடியே இது நிறைவேற்றிற்று. **மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார்** ( லூக்கா 24:44). மேலும், கொரி.3:3; கொலோ.2:14; கலா.5:4 போன்ற வசனங்களை வாசியுங்கள்.

**கிறிஸ்துவின் பிரமாணம்**

தேவனுடைய பிரமாணத்தில் நாம் மற்றுமொரு பிரமாணத்தைப் பற்றி வாசிக்கிறோம் இது தேவனுடைய புத்தகமாகிய வேதாகமத்தில் காணப்படும் நிலையான மற்றும் நிறைவான பிரமாணமாகும். இதுதான் கிறிஸ்துவின் பிரமாணம் அல்லது கட்டளையாக இருக்கிறது. இப்பிரமாணம் அல்லது கட்டளையானது கிறிஸ்துவின் மூலமாகவும் அவரால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் மூலமாகவும் நமக்குக் கொடுக்கப்பட்டது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் நமக்கு இப்பிரமாணத்தை கிறிஸ்துவிடமிருந்து பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் பிரமாணம், கிறிஸ்துவின் மரணத்திலிருந்து நடைமுறையில் உள்ளது. இப்பிரமாணம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை நம்மைக் கட்டுப்படுத்துகிறதாக இருக்கிறது. மேலும், இப்பிரமாணம் இவ்வுலகிலுள்ள எல்லா மக்களுக்காகவும் கொடுக்கப்பட்டது. **நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்** (மாற்கு 16:15) என்றார் இயேசு. எபிரெய ஆசிரியரும், **இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்** என்று எபிரெயர் 1:2 –ல் தெளிவுபடுத்தினார். மேலும், அந்த மறுரூபமலைக் காட்சியில் **இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்** என்று தேவன் சொன்னார் (மத்தேயு 17:5). இன்னுமாக, யோவான் 1:17 –ல், அப்போஸ்தலனாகிய யோவான் **நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது; கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின** என்று சொல்லுகிறார். யாக்கோபு 1:25–ல் கிறிஸ்துவின் பிரமாணத்தைச் சுயதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணம் என்றழைக்கிறார் அதன் ஆசிரியர்.

(– தொடரும்)

பெண்கள் பகுதி

# உபத்திரவத்தில் என் நிலை!

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். என்னை யாராவது அச்சுறுத்தினால் அல்லது என் பிள்ளைகள் அச்சுறுத்தப்பட்டால் நான் கிறிஸ்தவத்தை மறுதலிக்காமல் நிற்பேனா? இதற்கு யாருமே சரியான பதிலைக் கூறுவது கடினம். பிரச்சனை வந்தால் தான் உண்மை நிலை தெரியும். ஆனால், எச்சூழ்நிலையிலும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போல் தைரியமாக இருக்கப் பழகுவோம்.

இன்றைக்கு, நாம் போகிறபோக்கில் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம். பொருளாதார ரீதியிலும், சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய வகையிலும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் இருக்கிறோம். பசியிலும், பயத்திலும் நாம் இல்லை. சவுகரியம் இருந்தால் ஆராதிக்கலாம் இல்லையேல் விட்டுவிடலாம் என்ற நிலையில் தான் நாம் இன்று இருக்கிறோம். நிறைய புத்தகங்கள், பத்திரிக்கைகள், ஒத்த வாக்கியங்கள், வேதாகம விளக்கவுரைகள், இன்னும் இணையதள வசதி அப்படி, இப்படியென்று பல சாதனங்கள் நமக்கு சுலபமாகக் கிடைக்கின்றன. இவைகள் எல்லாம் எதை நமக்குக் காட்டுகிற தென்றால் தேவனுடைய அளவில்லாத அன்பு, பரலோகத்திலுள்ள பூரண சற்குணராகிய தேவன் தன் பிள்ளைகளாகிய நம்மேல் பொழிந்தருளும் ஆசீர்வாதங்கள்.

எந்தப் பாடுகளும் இல்லாமல் கிறிஸ்தவர்களாக இருக்கும் நமக்கு தேவன் கொடுக்கும் எச்சரிப்பை சற்று கவனிப்போம். பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தை இஸ்ரவேல் மக்கள் சுதந்தரிப்பதற்கு முன்பாக தேவன் கொடுத்த எச்சரிப்பைப் பாருங்கள்.

**ஆகையால், நீ புசித்துத் திருப்தயடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல**

**தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும்போது , உன் ஆடுமாடுகள் திரட்சியாகி; உனக்கு வெள்ளியும், பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும் போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின வரும், உன்னுடைய பின் நாட்களில் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைச் சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும், தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்திரவழியாய் உன்னை அழைத்து வந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணின வரும்..... உன்னை போஷித்து வந்த வருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும் இருக்க எச்சரிக்கையாயிரு....** (உபா. 8:10–17).

கடந்த காலங்களில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த இந்த எச்சரிப்பை கிறிஸ்தவர்களுக்கும் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக மனித கோட்பாடுகள் வெகுவாகப் போதிக்கப்படுகின்றன. வேதாகமம் ஏதோ ஒரு ஒழுக்கம் கற்றுக்கொள்ள உதவி செய்யும் புத்தகம் போல் பயன்படுத்தப்படுகிறது. ஒன்றான மெய்சபை, இரட்சிப்புக்கேற்ற போதனை, புதிய ஏற்பாட்டின்படியான ஆராதனை முறை, போன்ற உபதேச காரியங்கள் உண்மையாகக் கடைபிடிக்கப்பட்டாலும், உறுதியாகச் சொன்னால் பிறர் மனம் புண்பட்டுவிடும், பெலவீனமான அங்கத்தினர்களும் பின் வாங்கி விடுவார்கள் என்று உண்மையை உரக்க கூறாமல் அமைதி காக்கும் பழக்கம் இன்று வேகமாகப் பரவி வருகிறது. மேலும், உபதேசத்தை அடக்கி வைத்து, பிறரோடு ஒத்துப்போய், பிரிவினை சபையரோடு பட்டும் படாமல் கலந்து எல்லோரும் விசுவாசிகள் தானே என்று எண்ணும் நிலையும் காணப்படுகிறது.

இப்படிக் காட்டும் மௌனம் பல கிறிஸ்தவர்கள் வேத அறிவை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து, வசனத்திற்காக நிற்பது என்றால் என்ன என்பதே தெரியாத நிலையையும் நம் பார்க்க முடிகிறது. இன்னமும் பார்த்தால் கிறிஸ்தவர்கள் உலகத்தின் மேல் ஆசை வைத்து பொருளீட்டுதல்,

வாழ்க்கையை அனுபவிப்பதே இலக்கு என்றும், உல்லாசமான வாழ்க்கை, பிள்ளைகளை உல்லாசமாக வாழவிடுதல் போன்றவைகளுக்கு அடிமைகளாகி விடுகிறார்கள். இதுதவிர கணவன், மனைவி ஆகிய இரண்டு பேரும் வாரம் முழுவதும் வேலை, வேலை என்று அலைந்து, பிள்ளைகளை நடந்த வேண்டிய வழியிலே நடத்தாமல், உறுதியான கிறிஸ்தவக் குடும்பமாகக் கட்ட முடியாமல் காலத்தைக் கழிக்க வேண்டிய நிலை எங்கும் காணப்படுகிறது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து விதைக்கிறவன் உவமையிலே கூறும்போது, **இப்படிப்பட்டவர்கள் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால் கொஞ்சகாலம் மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம், உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்று** மாற்கு 4:17 ல் கூறுகிறார். இது இன்றும் பொருத்தக் கூடியதாகவே உள்ளது.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தை உலகம் முழுவதும் எடுத்துச்செல்ல வேண்டிய பொறுப்புடன், அதற்கேற்ப தங்கள் விசுவாசத்தையும், வாழ்க்கை முறைகளையும் அமைத்து வாழ்ந்தனர். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் சபை வளர்ந்த விதத்தை நாம் காணமுடியும். வாரத்தின் முதன் நாளுக்கு அத்துணை முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஏற்றுக்கொண்ட சத்தியத்தோடு ஒன்றையும் கூட்டவும் இல்லை, குறைக்கவுமில்லை. பாடுகள், உபத்திரங்கள் மத்தியில் தங்கள் உயிரையும் பொருட்டாக எண்ணாமல் சுவிசேஷத்திற்காக வாழ்ந்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுலுடைய வைராக்கிய பிரயாணங்களை நாம் பார்க்க முடியும்.

அதாவது ஆத்தும ஆதாயப் பணியை சிரசின்மேல் ஏற்றுக்கொண்டு சபையைப் பெருக்கினார்கள், தங்களிடத்தில் உள்ளதை ஊழியத்திற்காகக் கொடுத்தார்கள், எந்த எதிர்பார்ப்புமின்றி ஊழியப் பணி தொடரப்பட்டது, தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை சபை காரியத்தில் ஈடுபட வைத்தார்கள், கூடி ஜெபித்தார்கள், தீமோத்தேயு, தீத்து போன்ற இளைஞர்கள் பவுலுக்குக் கீழ்ப்படிந்து ஊழியப் பணி செய்தார்கள், ஆக்கில்லா பிரிஸ்கில்லா போன்றவர்கள் ஊழியக்காரரை ஆதரித்து, அனுசரித்து அவர்களைத் தங்களோடு இணைத்து ஊழியத்தை ஊக்கப்படுத்தினார்கள், லுக்கா என்ற மருத்துவர் பவுலோடு சேர்ந்து பவுலின் பெலவீனங்களை தாங்கி எப்படியாவது சுவிசேஷம் பரவ வேண்டும் என்று எண்ணினார்கள், சுயநலத்தை விரும்பி வாழாமல் சுவிசேஷம் பரவுவதே இலட்சியம் என்று

வாழ்ந்தார்கள், தங்களோடிருந்தவர்களே எதிர்த்தபோதிலும் சோர்ந்துபோகாமல் பசியிலும், பட்டினியிலும், பயணங்களிலும் மழையிலும், வெய்யிலிலும், சிறையிலும் இப்படி பலபாடுகளைப் பட்டு சபையை வளர்த்தார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த நாம் இன்று எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? கிறிஸ்துவின் உயிர்தெழுதலை, சிலுவையின் உபதேசத்தை முதலாவது நாம் விசுவாசித்து அதை கிரியையில் காட்டுகிறோமா?

இதை வாசிக்கும் அருமையான தாய்மார்களே! சிந்திப்போம். கிறிஸ்துவுக்காகவும், அவர் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபைக்காகவும் பாடுபடுவதில் நான் எங்கே இருக்கிறேன்? என் நிலை என்ன? என்பதைச் சிந்தித்து செயல்படுகிற கிறிஸ்தவப் பெண்களாக இருப்போம். தீமோத்தேயுக்களை உருவாக்கும் ஐனிக்கேயாள், லோவிசாள் போன்றவைகளை நாம் மாதிரியாக வைப்போம். எப்போதும் நம்மைப் பற்றியே சிந்தியாமல் கர்த்தருடைய காரியங்களையே சிந்திப்போம்,. அதற்காக செயல் படுவோம்! தேவன் தாமே அதற்கு உதவி செய்வராக! ஆமென். ★

## வேதத்தில் வாரத்தின் முதல் நாள்

- **வாரத்தின் முதல் நாள்** கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் (மத்.28:1-7).
- **வாரத்தின் முதல் நாள்** பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் (அப்.21:1-14).
- **வாரத்தின் முதல் நாள்** சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது (அப்.2).
- **வாரத்தின் முதல் நாள்** சபை ஸ்தாபிக்கப்பட்டது (அப்.2:38-47)
- **வாரத்தின் முதல் நாள்** அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடினார்கள் (அப்.20:7)
- **வாரத்தின் முதல் நாள்** காணிக்கை கொடுக்க கட்டளை பெற்றிருக்கிறார்கள் (கொரி. 16:1,2)
- **வாரத்தின் முதல் நாள்** சபை கூடிவருதலை விட்டு விடக் கூடாது ( எபி.10:25).

# தானியேலைப் போல

Dr. ஏபில் நாயகம்

**வா**ழ்க்கையில் முன்னேற வேண்டும், அனைவரும் மெச்சத் தக்க ஒரு நல்ல நிலையை அடைய வேண்டும் என்ற அசையில்லாதவர்களைக் காண்பது அரிது. குறிப்பாக, வாலிபப் பருவத்தில் இருப்பவர்கள் தாங்கள் வேலை செய்கிற இடத்திலோ, நண்பர்கள் மத்தியிலோ சிறந்து விளங்க வேண்டும் என்று நினைப்பது வழக்கம். அதிகச் சம்பாத்தியம் வேண்டும், அப்பொழுது தான் முன்னேற முடியும் என்ற நினைப்போடு இருப்பார்கள். ஆனால், சிலர் அந்த முன்னேற்றத்தை அடைவதற்கும் அதிகமாக சம்பாத்தியம் பண்ணுவதற்கும் சில தவறான வழிகளைத் தெரிந்துகொள்வதை நாம் பார்க்க முடியும். அதிலும் குறிப்பாக, கிறிஸ்தவ வாலிபர்கள் தங்கள் கொள்கை களுக்க மாறாகவும், விசுவாசத்திற்கு விரோதமாகவும் இருக்கும் சில காரியங்களைத் தங்கள் சுய லாபத்தை அடையவேண்டு மென்பதற்காகச் செய்கிறதை நாம் பார்க்க முடியும். ஒருவேளை முன்னேற்றத்தை அடைய, பலருடைய அங்கீகாரமும் கிடைக்க அவர்களைப் போல நாமும் இருக்க வேண்டுமா? என்ற கேள்வி நிச்சயம் நமக்கு வரும். மேலதிகாரிகளின் கண்களில் தயவைப் பெற நம் கொள்கைகளையும் நம் விசுவாசத்தையும் புறக்கணிப்பது தேவனுடைய கண்களில் நமக்கு கிடைக்கும் தயவை இழக்கச் செய்கிறது.

நாம் முன்னேறுவதற்கு தேவனுடைய இரக்கமும் தேவை என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது. நம் கொள்கைகளைக் கைவிடாமல், விசுவாசத்தை விட்டு விலகாமல் தேவனின் துணையோடு நாம் தேடுகிற முன்னேற்றத்தை வாழ்க்கையில் நிச்சயம் அடைய முடியும். அதற்கான சிறந்த உதாரணம் தானியேல். தன்னைத் தீட்டு படுத்திக் கொள்ளாமல் தன் கொள்கையில் உறுதியாய் இருந்த தானியேலை தேவன் உயர்த்தினாரே! அந்தத் தேவனுக்கு உங்களையும் என்னையும் உயர்த்துவது லேசான காரியம். தேவன் தானியேலை உயர்த்த காரணம் என்ன?

தானி. 1:8 – ல் **தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சை ரசத்தினாலும் தன்னை தீட்டுப்படுத்தலாகாது என்று தன் இதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டான்** என்று வாசிக்கிறோம். ஒரு புதிய இடத்தில் இருந்த தானியேல் எதைப்பற்றியும் கவலைப்படாமல், தன் கொள்ளையில் உறுதியாக இருந்ததைப் பாருங்கள். அவன் அப்படிச் செய்யவேண்டும் என்பது ராஜாவின் சட்டமாக இருந்தாலும், தான் அதைச் செய்யக் கூடாது என்ற தீர்மானத் தோடு இருந்தான். வாலிபர்களே! நாம் இருக்கிற இடங்களிலோ, கல்லூரிகளிலோ, வேலை செய்கிற ஸ்தலங்களிலோ எப்படி இருக்கிறோம்? யார் என்ன சொன்னாலும், என்ன நடந்தாலும் தேவன் வெறுக்கிற காரியங்களைச் செய்யமாட்டேன் என்ற தீர்மானத்தோடு நாம் இருக்கிறோமா? அல்லது மனம் போன போக்கிலே சென்று முன்னேற அதிக சம்பாத்தியத்திற்கும், நண்பர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து விட்டு, எந்த ஒரு தீர்மானமும் இல்லாமல் இருக்கிறோமா?

தானியேல் தன்னை போஜனத்தினாலும், திராட்சை யினாலும், தீட்டுபடுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான். அதாவது, தன்னுடைய கொள்கைகளை முன்னமே கூறிவிட்டான். பல சமயங்களில் அதை நாம் செய்வதில்லை. நண்பர்களின் கூட்டத்தில் இருக்கும் போது, வேலை செய்யும் இடங்களிலும், நம்முடைய கொள்கையை முன்னிறுத்துவதில் நாம் தயக்கம் காட்டுகிறோம். அந்தத் தயக்கம் பின்னர் பாவத்திற்குள் நம்மைப் புகுத்திவிடுகிறது. எனவே நாம் யார், நம் விசுவாசம் எப்படிப்பட்டது, நம் கொள்கை என்ன என்பதை பிறரிடம் சொல்ல நாம் தயங்கக் கூடாது.

தானியோல் தன் வேலையில் மிகவும் கவனமாயிருந்தான். எந்த ஒரு தவறையும் செய்யாமல் தன் வேலைகளைச் சிறப்பாக செய்து வந்தான். தானி 6:1–4 வரை வாசித்தால் அதை கவனிக்க முடியும்.தேசாதிபதிகளும் தானியேலை குற்றப்படுத்த முயன்றார்கள். வசனம் 4 ல், .... அவன் உண்மையுள்ளவனாக இருந்த படியினால்அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும் இன்றளவும் காணப்படவில்லை என்று வாசிக்கிறோம். ஆம் வாலிபர்களே! தானியேல் தான் வேலை செய்த இடத்தில் எந்த ஒரு குற்றமும் இல்லாமல் உண்மையானவனாக இருந்தான். நாம் வேலை செய்கிற இடத்தில் எப்படிபட்டவர்களாக இருக்கிறோம்?

இங்கே தேவன் தானியேலை உயர்த்தினார். அவனுக்குப் பணி உயர்வு கிடைத்தது. அதற்கான காரணம் அவன் உண்மை யாயிருந்தான், எந்த ஒரு குற்றத்தையும் செய்யாமல் இருந்தான்.

இங்கே தேவன் தானியேலை உயர்த்தினார். அவனுக்குப் பணி உயர்வு கிடைத்தது. அதற்கான காரணம் அவன் உண்மையாயிருந்தான், எந்த ஒரு குற்றத்தையும் செய்யாமல் இருந்தான். இன்று பலர் தங்களுக்கு பணி உயர்வு வேண்டும், முன்னேற வேண்டும் என்று எண்ணி, குறுக்கு வழிகளையும், மனிதனை பிரியப்படுத்தும்படியான வழிகளையும் தேடுகிறார்கள். ஆனால், தேவனுடைய பார்வையில் தயவு கிடைக்க உண்மையாகவும், குற்றமற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை மறந்து விடுகிறார்கள். தங்கள் சொந்த முயற்சிகளையும் பாவமான வழிகளையும் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி, தேவனையும் அவருடைய தயவையும் மறந்து விடுகிறார்கள்.

வாலிபர்களே! நாமும் தானியேலைப் போல பாவத்திற்கு எதிர்த்து நிற்கத் தீர்மானம் கொண்டு, உண்மையாயிருந்து அதன் மூலம் நம் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்போம். தேவன் நம் நடைகளை ஸ்திரப்படுத்துவாராக. ★

## இயேசுவைப் பற்றி உரைத்ததின் நிறைவேற்றம் [மத். 12:17-21].

**இதோ, நான் தெரிந்து கொண்ட என்னுடைய தாசன்**

**என்ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்**

**என் ஆவியை அவர் மேல் அமரப்பண்ணுவேன்**

**அவர் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார்**

**வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார்**

**அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை**

**அவர் நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப்பண்ணுகிறவர்**

**தெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை**

**அணைக்காமலும் இருப்பார்.**

**அவருடைய நாமத்தின் மேல் புறஜாதியார் நம்பிக்கை வைப்பார்கள்**

சிறுவர் பகுதி



# பொய் சொல்லுதல்!

Dr. பிரைய்ஸி

**ஹா**ய் குட்டீஸ்? எப்படி இருக்கீங்க..?

***தா***னியேல் போல தினமும் மூன்று வேளை ஜெபிப்பீர்கள் என நம்புகினே். இம்மாதம், பொய் சொல்லுதலை தேவன் எப்படிப் பார்க்கிறார் என்று கவனிக்கப் போகிறோம்.

முதலாவது, எனக்கு அன்பான சிறு பிள்ளைகளே, நாம் பொய் சொல்லும்போது அது சிறியதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும் தேவன் மிகவும் அதிருப்தி அடைகிறார். இது குறித்து அப்போஸ்தலர் 5:1–11 வசனங்களில் பார்க்க முடியும். இந்த வேத பகுதியைப் படித்துவிட்டு, பிறகு இக்கட்டுரையைத் தொடர்ந்து படியுங்கள்.

இந்த வேத பகுதியில், அனனியாவும், சப்பீராளும், தாங்கள் விற்ற நிலத்தின் கிரயத்தில் பொய் சொன்ன மாத்திரத்தில் இறந்து போனார்கள். அந்நாட்களில், கிறிஸ்தவர்களாயிருந்தவர்களுக்கு சொந்தமாக நிலபுலங்கள் இருந்தது. அந்நிலங்களை அவர்கள் தங்களுடையதாகக் கருதாமல், தேவனுடையதாக எண்ணி, தேவையிலிருப்பவர்களுக்குக் கொடுக்கும்படியாக அதை விற்று அப்போஸ்தலர்களிடம் கொடுத்தார்கள் [அப்.4:35].

ஆனால், அனனியாவும், சப்பீராளும் தங்களுடைய நிலம் தேவனால் கொடுக்கப்பட்டது என்னும் உண்மையை மறந்து, நிலத்தை விற்று, அதில் ஒரு பகுதியை மறைத்து, எஞ்சியதை அப்போஸ்தலர்களிடம் கொண்டு வந்து, **இவ்வளவுக்குத்தான் விற்றோம்** என்று பொய் சொன்னார்கள். அவர்கள் தங்கள் வஞ்சக செயலை தேவன் மேலே இருந்து கவனிக்கிறார் என்பதையும், பேசுகிற பொய்யை தேவன் கேட்கிறார் என்பதையும் மறந்து போனார்கள். இதினிமித்தம் தேவன் அவர்களைத் தண்டித்தார்.

நம்மிடத்தில் இருப்பதெல்லாம் தேவன் நமக்குக் கொடுத்தவைகள் என்பதை நாம் மறவாமல், அவருக்குக் கொடுப்பதில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். சிறு பொய்யாக இருந்தால் கூட தேவன் பொய்யை வெறுக்கிறார். ஆகவே, நாம் சிறு வயதிலிருந்து பொய் பேசாமல் இருக்கப் பழகி உண்மையே பேசி, சரியானதையே செய்ய வேண்டும். தேவன் உங்களை ஆசீர்வதிகப்பாராக!

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.**

## சிறுவர்களுக்கான வேத வினா ( படிக்க அப் . 5:1-11)

1. கணவன் அனனியா செய்த தவறை சப்பீராள் அறிந்திருந்தாளா?
2. தன் கணவன் மரித்தபோது, சப்பீராள் கூட இருந்தாளா?
3. தன் கணவன் மரித்துப்போனதை எப்பொழுது அறிந்து கொண்டாள்?
4. அனனியாவும், சப்பீராளும் என்ன தவறு செய்தார்கள்?
5. அனனியா, சப்பீராள் மரிக்கும் முன் அவர்களிடம் பேசின, அப்போஸ்தலன் பெயர் என்ன?

**சரியான பதில் எழுதியவர்களில் சிலர்**

| | |
|---|---|
| பெனிட்டா டென்னி | – காங்கயம் |
| ஹெவன்லின் | – திருப்பத்தூர் |
| கிங்ஸ்லி | – காங்கயம் |
| ஜெபஸ்ரீ | – சென்னை |
| ஜெப பிரியா | – சென்னை |
| ஸ்டெஃபி ஏஸ்லின் | – பல்லடம் |
| அபிஷேக் | – பவானி |

## கிறிஸ்து பெரியவர்

★. **கிறிஸ்து** தேவாலயத்திலும் பெரியவர் [மத்.12:6]

★. **கிறிஸ்து** யோனாவிலும் பெரியவர் [மத்.12:41]

★. **கிறிஸ்து** சாலொமோனிலும் பெரியவர் [ மத். 12:42]

★. **கிறிஸ்து** உலகத்திலிருப்பவனிலும் பெரியவர் [ யோவான். 4:4]

★. **கிறிஸ்து** ஓய்வுநாளுக்கும் ஆண்டவர் [மத். 12:18]

## வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

*Sis.* **லாவின் பென்னி**

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் **திருமறை ஆசான்** முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை **ஜூலை** மாத இதழில்)

### *I* இராஜாக்களின் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் (1-5 அதிகாரங்கள்)

1) தாவீது ராஜா வயது சென்றபோது அவனுடைய ஊழியக்காரர் அவனுக்காகத் தேடிய பெண்ணின் பெயர்?
2) யார் நான் ராஜா ஆவேன் என்று சொல்லிக் கொண்டான்?
3) சாலொமோன் ராஜாவின் தாயின் பெயர் என்ன?
4) யோனத்தானின் தகப்பன் பெயர் என்ன?
5) தாவீது எங்கே அடக்கம் பண்ணப்பட்டார்?
6) சாலொமோன் யாரோடு சம்பந்தம் கலந்தான்?
7) கர்த்தர் சாலொமோனுக்கு சொப்பனத்திலே எங்கே தரிசனமானார்?
8) சாலொமோனுக்கு எத்தனை குதிரை லாயங்கள் இருந்தன?
9) தீருவின் ராஜாவினுடைய பெயர் என்ன?
10) சாலொமோனிடத்தில் சுமை சுமக்கிறவர்கள் எத்தனை பேர் இருந்தார்கள்?

### மே மாத வினாக்களுக்கான விடைகள்

1. ரப்பாவை (11:1)
2. பத்சேபாள் (2:1)
3. நாத்தான் தீர்க்கதரிசி (12:1)
4. தாமார் (13:1)
5. எப்ரோன் (15:9)
6. அகித்தோப்பேல், ஊசியா (17:14)
7. தேன், வெண்ணெய், ஆடு, பால்கட்டி (4:17)
8. சீபா (19:17)
9. மூன்று வருஷம் (21:1)
10. பெலிஸ்தர் (21:19)

### சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| N. ஜெபத்தாய் | – | தூத்துக்குடி |
| C. தர்மராஜ் | – | நுள்ளி விளை |
| S. ஜெயராஜ் | – | கோவை |
| K.S. மாணிக்கவாசகம் | – | திருச்சி |
| V.S.S. பால்ராஜ் | – | மதுரை |
| Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் | – | கடலூர் |
| M. செல்வம் | – | வெள்ளலூர் |
| பாக்கியம் சம்பூர்ணம் | – | ஈரோடு |
| M.D. ரவிச்சந்திரன் | – | சென்னை |
| ப்ளோரா சம்மா | – | திருப்பத்தூர் |
| R. ராகுல் | – | காங்கயம் |
| ஜமுனா சேகர் | – | திருப்பூர் |
| R. ராஜேந்திரன் | – | சிங்காநல்லூர் |
| V.C. ரூபவல்யா | – | நாசரேத் |
| P. ராஜேந்திரன் | – | தரங்கம்பாடி |
| ஜெ.ஜான்சி | – | ஆனைமலை |
| A. காணிக்கை | – | திருச்சி. |
| N. இந்திரா ஜெபக்கனி | – | தூத்துக்குடி |
| A. ஜெயஷீலா | – | காரைக்கால் |
| S. சாந்தகுமாரி | – | நாசரேத் |
| C. அருள்ராஜ் | – | சென்னை |
| மரியாள் | – | மணலி, சென்னை |
| ராமச்சந்திரன் | – | காங்கயம் |
| இளவரசி | – | காங்கயம் |
| ஷீலா ராணி | – | சிவன்மலை |
| பாலாமணி | – | காங்கயம் |
| செல்வமணி குணசேகரன் | – | சென்னை |
| செல்வி | – | சிவன்மலை |
| R. ஹேமாவதி | – | பவானி |
| R. ரோஷிணி | – | பவானி |

# பரிபூரண ஜீவனுக்கான இரகசியங்கள்

பென்னி மார்டின்

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாகச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாகவே மனித இனத்துக்கு இரகசியத்தை அறியவும், அறிவை விரிவாக்கவும் தொன்று தொட்டே ஆசை உண்டு. யாரோ ஒருவர் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கான இரகசியத்தை தெரிவிக்கப் போகிறேன் என்று சொன்னால் கூடியிருப்பவர்கள் அப்படி கூறுபவரிடத்தில் தங்கள் காதுகளை கடனாகக் கொடுத்து விடுவார்கள். வேறுவிதமாகச் சொன்னால் மக்கள் இரகசியத்தை அறிந்து கொள்ள தங்களையே முழுமையாக மூழ்கடித்து விடுவார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் பத்தாம் அதிகாரத்தில் மட்டற்ற மகிழ்ச்சிக்கான இரகசியத்தையும், சம்பூரண சமாதானத்திற்கான இரகசியத்தையும் பரிபூரண ஜீவனுக்கான இரகசியத்தையும் தெரிவிக்கிறார். அந்த இரகசியம் என்ன? என்ன? என்று நீங்கள் கேட்பது என் காதுகளில் கேட்கிறது. நம் இரட்சகரான இயேசு கிறிஸ்து அந்த இரகசியத்தை தம்முடைய போதனையின் மூலமாக அறிவித்திருக்கிறார். அவைகளுள் பெரும்பாலானவைகள் யோவான் சுவிசேஷப் புத்தகத்தின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக யோவான் 15 ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து தம்மை திராட்சச் செடி என்றும், தம்முடைய சீடர்களைக் கொடிகள் என்றும் அடையாளப்படுத்துகிறார் [யோவான் 15:1–5]. கொடிகளாக நாம் கனி கொடுக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதுதான் பரிபூரண ஜீவனுக்கான முதல் இரகசியமாயிருக்கிறது.

**பரிபூரண ஜீவனுக்கான இரகசியம் கனி கொடுத்தல்**

பிரியமானவர்களே கிறிஸ்தவ வாழ்க்கையில் கனி கொடுப்பதென்பது தன்னிகரற்றதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவும் திகழ்கிறது. நாம் பல விதங்களில் கனிகளைக் கொடுக்க முடியும்.

நாம் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதும் கனி கொடுப்பதன் ஒரு விதமாகும் (ரோமர்1:13). நாம் பொதுவாக ஆத்தும ஆதாயம் செய்வதென்பது சபை ஊழியக்காருடைய வேலை, நாம் சபைக்குப் போவதே பெரிய வேலை, போதாதென்று ஆதாயம் வேறு செய்ய வேண்டுமா என்று முறுமுறுக்கிறோம். நாம் திராட்சச் செடியாகிய கிறிஸ்துவில் கொடிகளாக இருந்தால் நிச்சயமாக கனிகளைக் கொடுப்போம். கனி கொடுப்பதில் மற்றொரு விதம் நற்கிரியைகளைச் செய்வதாகும். நற்கிரியை செய்வதென்பது பிறர்க்கு நன்மை செய்வதைக் குறிக்கிறது. நாம் வாழ்க்கையின் பல கட்டங்களில் பலருக்கு நன்மைகள் செய்கிறோம், ஆனால் அவர்கள் நமக்கு திரும்ப உபகாரத்திற்குப் பதிலாக உபத்திரவத்தை செய்து விடுவதால் **நன்மை செய்து என்ன பிரயோஜனம் என்று சோர்ந்து போகிறோம். அதனால்தான் வேத வசனம் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்** என்று நம்மை உற்சாகப்படுத்துகிறது (கலா.6:9).

நாம் கனி கொடுப்பதினால் பிதா பிரியப்படுகிறார். மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுகிறது என்பதைத் தாண்டி நமக்கே அதாவது கனிகொடுப்பவருக்கே நன்மை ஏற்படுகிறது. உதாரணமாக ஒருவர் மற்றொருவரை ஆதாயப்படுத்தினால் ஆதாயப்படுத்துபவருக்கும் மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்துகிறது (III யோவான் 4). இந்த சந்தோஷத்தை உலகத்தில் எந்தப் பொருளும் தரமுடியாது. அதேபோல் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை தேவனுக்குச் செலுத்தும்போது நமக்கு சமாதானம் கிடைக்கிறது. இது உலகம் தருகிற சமாதானமல்ல, எல்லாவற்றிற்கும் மேலான தேவ சமாதானத்தைப் பெற்றுக் கொளகிறோம். இவைகளெல்லாம் இயேசு கிறிஸ்து தரும் பரிபூரண ஜிவனின் நன்மைகளாகும்.

### கனி கொடுப்பதின் ரகசியம் நிலைத்திருத்தல்

நாம் கனிக் கொடுத்தால்தான் பரிபூரண ஜீவனை அடைய முடியுமென்று பார்த்தோம். ஆனால், நாம் கனிக்கொடுத்தலின் இரகசியம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதாயிருக்கிறது. நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைத்திருந்தால்தான் கனிகொடுக்க முடியும். அவரின்றி நம்மால் எதையும் செய்ய முடியாது. இன்றைய நாட்களில் நாம் பார்க்கும்போது பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் வருகிறார்கள், ஆனால், பாடுகள்

உபத்திரவங்கள் வரும்போது பின்வாங்கி விடுகிறார்கள். இதன் பெயர் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதல்ல. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ரோஜா மலர்களாலான மெத்தையில் நடப்பது போன்றதல்ல. சில வேளைகளில், கடினமான பாதைகளில் நாம் பயணிக்க வேண்டியது வரும். ஆனால், நாம் அதைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், நாம் தனியாக பயணிப்பதில்லை நம்மோடு வந்து நமக்கு உதவிச் செய்ய கிறிஸ்து வல்லவராயிருக்கிறார். பலர் கிறிஸ்தவ வாழ்க்கையில் சோதனை வரும்போது சோர்ந்து போய் முடிவைப் பற்றி சரியாக முடிவெடுக்க முடியாமல் தடுமாறி தடம் புரண்டு விடுகிறார்கள். **சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்** என்று வேதாகமம் பல இடங்களில் நம்மை உற்சாகப்படுத்தினாலும் கூட (யாக்கோபு 1:12) வேத வாக்கியங்களின் மீது விசுவாசமில்லாமல், சோர்ந்து போகிறவர்கள் கிறிஸ்துவில் நிலைத்திருக்க முடியாது.

## நிலைத்திருத்தலின் இரகசியம் கீழ்ப்படிதல்

நாம் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்கு அவருக்கு கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. **நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டால் அவருடைய அன்பிலே நிலைத்திருக்க முடியும்** (யோவான் 15:10). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தபடியால் தான் அவருடைய அன்பிலே நிலைத்திருக்க முடிந்தது. வாழ்க்கையின் பல சந்தர்ப்பங்களில் கிறிஸ்துவை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம் என்று பெருமைபட்டுக் கொள்கிறோம். அவரைப் பற்றி சில காரியங்களை அறிந்துகொண்டு நாம் அவ்விதமாக தம்பட்டம் அடித்துக் கொள்கிறோம். ஆனால், வேத வசனம் **அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை** என்று சொல்கிறது (1யோவான் 2:4). இவைகளையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது, கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் ஒருவர் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கவே முடியாது. அதே நேரத்தில், நாம் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிவதற்கான இரகசியம் அவரிடத்தில் அன்பு கூருவதாகும்.

பொதுவாக நாம் பார்க்கும்போது, ஒருவருக்கு நாம் கீழ்ப்படிய மூன்று காரணங்களுண்டு. முதல் காரணம் பயம். அதாவது, ஒரு குழந்தை தன் பெற்றோரின் தண்டனையிலிருந்து தப்பித்துக்

கொள்ள கீழ்ப்படிவது போல. இரண்டாவது காரணம், நாம் விரும்பியதை பெற்றுக்கொள்வதற்காகக் கீழ்ப்படிவது. உதாரணமாக, ஒரு வாலிபன் தன் பெற்றோரின் தயவை பெறுவதற்காக கீழ்ப்படிய வேண்டுமே என்று கீழ்ப்படிவது. மூன்றாவது காரணம், **அன்பில் கடன்பட்டிருக்கிறோம்** என்கிற உணர்வில் கீழ்ப்படிவது, உதாரணமாக முதிர்ச்சியடைந்த பிள்ளைகள் தங்களுக்கு எல்லாம் இருந்தும் அன்பின் காரணமாக பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவது. மேற்சொல்லப்பட்ட உதாரணத்தில் நாம் மூன்றாவது வகையைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்று கிறிஸ்து விரும்புகிறார். நாம் அன்பினால் அவருக்கு கீழ்ப்படிகிற அளவுக்கு முதிர்ச்சி அடைந்துவிட்டோமா? கட்டாயத்தின் பேரில் நாம் அவருக்கு கீழ்ப்படிவதை அவர் ஒருபோதும் விரும்புவதேயில்லை.

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! நாம் இதுகாறும் இப்பூமியில் பரிபூரண ஜீவனை அடைவதற்கான மூன்று இரகசியங்களைப் பார்த்தோம். முதலாவது இரகசியம் **கனி கொடுத்தலென்றும், இரண்டாவது இரகசியம் நிலைத்திருத்த லென்றும், மூன்றாவது இரகசியம் கீழ்ப்படிதலென்றும் பார்த்தோம்.** இப்பூமியில் நாம் அரைகுறையான வாழ்க்கையை அல்ல, முழுமையான வாழ்க்கையை வாழ வேண்டுமென்றுதான் கிறிஸ்து விரும்புகிறார். இந்த மூன்று இரகசியங்களும் அதற்கு உறுதுணையாக இருக்கும். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென். ★

## பேதுருவும் மூன்றும்

- ★ இயேசுவோடு மறுரூப மலை சென்ற **மூன்று** பேரில் ஒருவர் (மத்.17).
- ★ இயேசு பேதுருவிடம் நீ என்னை **மூன்று** தரம் மறுதலிப்பாய் என்றார் (மத்.26:34).
- ★ பேதுரு இயேசுவிடம் **மூன்று** கூடாரங்களைப் போடுவோம் என்றார் (மத். 17,4).
- ★ இயேசுவோடு கெத்சமனே சென்ற **மூன்று** பேரில் ஒருவன் (மத்.26:36,37).
- ★ இயேசுவை பேதுரு **மூன்று** தரம் மறுதலித்தான் (மத். 26:75).
- ★ இயேசு பேதுருவிடம் **மூன்று** தரம் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார் (யோவான் 21:15-17).
- ★ பேதுரு **மூன்று** முறை தரிசனங் கண்டான் (அப்.10:10).
- ★ பேதுருவை **மூன்று** மனுஷர் தேடினார்கள் (அப். 11:11)

# பொய்யைக் களைவோம்

## எபேசியர் 4:25

*Bro. K.M.* **பிலிப் -பவானி**

**ம**னிதன் பெரும்பாலும் மனதாரப் பாவம் செய்வதில்லை. சந்தர்ப்பம், சூழ்நிலைகள், மனநிலைத் தூண்டுதலால் பாவம் செய்து விடுகிறான். ஒரு காலகட்டத்தில் தன் செயல்களுக்காக வருத்தி வெறுத்து விட்டுவிட முடிவெடுக்கிறான். ஆனால், ஒரு பாவத்தை மட்டும் பாவமாகவே கருதுவதில்லை. சர்வ சாதாரணமாகச் செய்கிறான். இதைச் செய்யாமல் வாழ முடியாது: இதன் மூலம் பல இக்கட்டுகளிலிருந்து தப்பிக்க முடிகிறது, இதனால் செல்வமும், செல்வாக்கும் பெற முடிகிறது என்று தனக்குத் தானே இப்பாவத்தை நியாயப்படுத்திக் கொள்கிறான். மேலும், இதைச்செய்ய சாமர்த்தியமும், தைரியமும் வேண்டும் என்று தன்னைத்தானே பாராட்டிக் கொள்கிறான். அதைச் செய்யவும் விரும்புகிறான். இப்படி உலகப்பார்வையில் நன்மையாய், பெருமையாய் கருதப்படும் பாவந்தான் **பொய்** ஆகும். ஆனால், சர்வத்தையும் நேர்த்தியாய்ப் படைத்த தேவனுடைய பார்வையில் இது எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதைக் கூர்ந்து கவனிப்போம். நீதி.12:22-ல் **பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் என்றும்,** சகாரியா8:17-ல் **ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இதயத்தில் தீங்கு நினையாமலும், பொய் யாணையின்மேல் பிரியப்படாமலும் இருங்கள்; இவைகள் எல்லாம் நான் வெறுக்கிற காரியங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்** என்றும் பார்க்கிறோம். இப்படி தேவன் அருவருக்கிற, வெறுக்கிற பொய்யை அருடைய பிள்ளைகளாகிய நாமும் அதைக் களைந்து போடுவோம். **உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்** [நீதி. 12:22] என்பதைப் புரிந்து கொண்டு பொய்யை வெறுத்து ஒதுக்குவோம்.

நாம் எப்பொழுதும் பொய் பேசுகிறவர்களாயிருந்தால், நாம் உண்மையைப் பேசும் பொழுதும் நம்மை நம்பமாட்டார்கள். எனவே, பொய் பற்றி வேதத்தின் துணை கொண்டு, பொய் யாருடையது? எங்கே உற்பத்தியாகிறது? அது உண்மையில் மனிதனுக்கு நன்மை செய்யுமா? என்பதை இக்கட்டுரையின் மூலம் ஆராய்ந்து தெளிவடைவோம்.

ஆதியில் தேவன் மனிதனை தன்னுடைய சாயலாகவே படைத்தார். தேவப்பண்புகளில் ஒன்றுதான் **அவர் பொய்யுரையாத தேவன்** (தீத்து 1:3) **இஸ்ரவேலின் ஜெபபலமானவர் பொய் சொல்கிறதில்லை** (I சாமு. 15:29) என்பதாகும். பொய்யற்ற மனிதனின் வாழ்க்கையில் எப்பொழுதும் தேவ உறவும், சமாதானமும், சந்தோசமும் இருந்தது. ஆனால், **பொய்யனும் பொய்யுக்குப் பிதாவுமாயிருக்கிற பிசாசானவன்** (யோவான் 8:44) ஏவாளுக்குள் புகுந்து, **நீங்கள் சாவதே சாவதில்லை** என்ற முதல் பொய்யினால் அவளை வஞ்சித்தான் (ஆதி.3:4). சாத்தான் அன்று பேசிய அந்த முதல் பொய் இன்றுவரை பொய்யாகவே இருக்கிறது. அந்த முதல் பொய், 1. தேவ கட்டளையை மீறச் செய்தது. 2. தேவ உறவைத் துண்டித்தது. 3. சாபத்தைக் கொடுத்தது. ஆம். அன்று சாத்தான் பொய்யைச் சுமந்து வந்து அதை மனிதனை சுமக்க வைத்தான். அந்தப் பொய்யால் இன்றும் மனித இனத்திற்கு இளைப்பாறுதலே இல்லை. அன்பானவர்களே! பொய்க்குப் பிதா வாகிய சாத்தானிடமிருந்து வெளிப்படுகிற இந்தப் பொய்யினால் ஒருபோதும், ஒரு நன்மையும் கிடைக்காது என்பதற்கு மனிதர் களே நமக்கு முன், சாட்சியாக நிற்கிறார்கள். ஆனாலும் இன்றும் சாத்தான், பொய் நன்மை தரும் என்னும் மாய வலையை வீசி இல குவாய் இணங்கச் செய்து மனிதர்களை மாபெரும் சாபத்துக் குள்ளாக்கி விடுகிறான். பிரியமானவர்களே பொய் ஒருபோதும் நன்மை தராது. மாறாக, சாபம் தான் தரும் என்பதை சத்தியத்தில் உள்ள 2- சரித்திர சம்பவங்களை ஆராய்ந்து உணர்வடைந்து பொய்யைக் களைவோம்.

**சரித்திரம்** I : (II இராஜா. 5:1-27) சீரிய தேசத்து தளபதி நாக மான் தன் குஷ்டம் நீங்க தீர்க்கதரிசி, எலிசாவிடம் வருகிறான். தேவ மனுஷன் எலிசா சொன்னபடி யோர்தானில் **7முறை** முழுகி குஷ்டம் நீங்கி சுகமடைகிறான். அதற்கு நன்றி சொல்லவும், காணிக்கைகளைக் கொடுக்கவும் எலிசாவிடம் திரும்ப வருகிறான். எலிசா அவைகளை ஏற்காமல் தட்டுதல் பண்ணின தால் நாகமான் திரும்பச் செல்கிறான். இவைகளையெல்லாம் கவ னித்த எலிசாவின் வேலைக்காரன் கேயாசி நாகமானைப் பின் தொடர்ந்து சென்று, தன் எஜமான் கேட்டார் என்று பொய்பேசி வெகுமதிகளை வாங்கி தன் வீட்டில் வைத்து விட்டு, எலிசாவின் முன் வந்து நிற்கிறான். இவைகளை எல்லாம் தன் ஞான திருஷ்டியால் அறிந்த எலிசா, கேயாசி தன்னிடமும், நாக மானிடமும் தொடர்ந்து பொய்களைப் பேசி மாய்மாலம் செய்ததால் கேயாசியை சபித்தான். உடனே நாகமானின் குஷ்டம் அவனைப் பிடித்தது. குஷ்டரோகி கேயாசி அவ்விடத்தை விட்டு விலகினான். இந்த சாபம் பொய் பேசிய கேயாசியை மட்டுமல்ல

அவனுடைய சந்ததியையும் பாதித்தது என்பதே கொடுமையான விசயமாகும்.

அன்பானவர்களே! பொய் சொல்லி வாங்கிய வெகுமதிகள் அவனுக்கு சுகவாழ்வு கொடுத்ததா? தன் குடும்பத்திற்கு சுக வாழ்வை சம்பாதித்துக் கொடுக்க வேண்டிய தலைவன், சாபத்தை அல்லவா சம்பாதித்துக் கொடுத்திருக்கிறான். பொய் தானே என்று அசட்டை வேண்டாம். **பொய் நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கிறது** [நீதி.21:16] என்று வேதம் எச்சரிப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். பொய்க்கு உங்கள் வாழ்க்கையில், முற்றுப்புள்ளி வையுங்கள். ஏனெனில், **பொய்களைப் பேசுகிறவன் நாசமடைவான், உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்** [நீதி.19:9;12:22]. பிரியமானவர்களே, இந்த பொல்லாத பொய், உங்களை ஆட்கொள்ளாமலிருக்க **துணிகரமான பாவங்களுக்கு உமது அடியோனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆண்டுகொள்ளவொட்டாதேயும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்திற்கு நீங்கலாயிருப்பேன்** [சங்.19:13] என்று ஜெபியுங்கள். பொய் சுகவாழ்வு தராது என்பதால் பொய்யைக் களைவோம்.

**சரித்திரம்** II: பொய் பேசி, தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவதில், தவறில்லை என்ற சிந்தைக்கு ஒரு சரித்திரம்: இளையவரான யாக்கோபு பிறப்பிலேயே **மூத்தவன் இளையவனை சேவிப்பான்** என்ற தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றவன். இவன் தாய் ரெபெக்காள் இத்தேவவாக்கை, கணவன் ஈசாக்கிடம் நினைவுபடுத்தி நேர்மையான முறையில் யாக்கோபுக்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். ஆனால், அவள் தேவ வாக்கை நம்பாமல் சுயபுத்தியின் மேல் சாய்ந்து யாக்கோபின் மீது இருந்த மிதமிஞ்சிய பாசத்தாலும், தான் செய்யும் பாவத்தைக் குறித்த உணர்வற்றவளாகவும், மகனை பல பொய்கள் பேச வைத்து, ஏசாவுக்காக ஈசாக்கிடம் இருந்த ஆசீர்வாதத்தைத் தட்டிப் பறித்தாள். ஒரு பொய்யை மறைக்க 6 [9பொய்] பொய்கள் பேசினான். இவன் பேசிய பொய்கள் 1. தகப்பனை பிரமித்து நடுங்க வைத்தது. 2. அண்ணன் ஏசாவை மனங்கசந்து அழச் செய்தது மட்டுமல்ல. 3. பெற்றுக் கொண்ட யாக்கோபின் நிலை, அடுத்த நாளே வெறுங்கையும் கோலுமாய் ஊரைவிட்டே ஓடச் செய்தது. அதாவது பொய் அவனைத் துரத்தியது. தேவ ஆசீர் வாதத்தால் அவனது குடும்பம், செல்வம், செல்வாக்கு பெருகிய போதும், சமாதானத்தை, சந்தோஷத்தை இழந்து, வாழ்நாள் முழுவதும் வருத்தமும், சஞ்சலமும், பயமும், கலக்கமுமாகவே

கழிந்தது. எல்லாம் இருந்தும் ஒன்றுமில்லை என்ற நிலை தான். **நான் பரதேசியாய் வாழ்ந்த நாட்கள் 130 வருஷம்; என் ஆயுசு நாட்கள் கொஞ்சமும், சஞ்சலமுள்ளதாயிருக்கிறது என்பதே யாக்கோபின் நிலை**[ஆதி.47:9]. **ஆம், மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்** [கலா.6:10]. விதைப்பது ஒரு விதையாயிருந்தாலும் அறுப்பது பல என்பதை மனதில் வையுங்கள். பொய்யை களைந்து உண்மையை விதையுங்கள்.

அருமையானவர்களே! பொய்யுரையாத தேவனுடைய பிள்ளைகளாயிருந்தும், தேவ ஆசீர்வாதத்தை வாக்காகப் பெற்றிருந்தும், ரெபெக்காளும், யாக்கோபும் தங்கள் நம்பிக்கையை பொய்யின் மீது வைத்ததால் சாபமும், சஞ்சலமுமே வாழ்க்கையாய் முடிந்தது. ஆவிக்குரிய வாழ்க்கையிலும் இதுவே உண்மையாகும். **அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான்; அவனுக்குள் சத்தியமில்லை** [Iயோவான்2:4]. **மேலும் அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால்.... நீ பொய்யனாவாய்** [நீதி.30:6]. ஆகவே, பொய்யர்களுக்குப் பரலோகத்தில் இடமில்லை. நியாயத்தீர்ப்பில் **பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்** [வெளி.21:8] என்று சத்திய வேதம் வெளிப்படுத்தியுள்ளதை தயவு செய்து கவனியுங்கள். **பரிசுத்த நகரத்திற்குள் பிரவேசிக்க அவருடைய கற்பனைகளின்படி நடக்கிறவர்களே பாக்யவான்கள்** [வெளி. 22:14]. ஆகவே, நாம் மரணபரியந்தம் உண்மையாயிருப்போம் மாயையும், பொய் சனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும் என்று ஜெபிப்போம், பொய்யைக் களைவோம். நம்மை அழைத்தவர் உண்மை உள்ளவர். அவர் அப்படியே செய்வாராக! ஆமென். ★

## *பரமேறியவர்கள்*

- **ஏனோக்கு** தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டார் [ஆதி.5:24].
- **எலியா** சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான் [II ராஜா. 2:11].
- **கர்த்தர்** அவர்களுடனே பேசின பின்பு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் [மாற்கு 16:19].
- **கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷன்** மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான் [II கொரி. 12:2]

# மனுஷருக்கு நேரிடுகிற சோதனை

Bro K.பாண்டியன்

அன்பின் திருமறை ஆசான் வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் சமாதானம் உண்டாவதாக. பொதுவாக வாழ்வில் கஷ்டத்தை அனுபவிக்கும் மனுஷர் இப்படியாக புலம்புவதைக் கேட்டிருக்கின்றோம். எனக்கு வந்த மாதிரி யாருக்கும் கஷ்டங்கள் வந்திருக்காது அல்லது நான் பட்ட அவதி என் எதிரிக்குக் கூட வரக் கூடாது என்றோ அடிக்கடி நாம் கேட்கிறோம். மேலும், நான் இவ்வளவு வேதனைப்படுகிறேன், அந்தக் கடவுளுக்குக் கூட கண் இல்லையா? என்றும் மனுஷர் ஆதங்கப்படுகின்றனர். வேதம் சொல்வதைக் கவனிப்போம். **மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு இடங்கொடாமல், சோதனையோடுங் கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (Iகொரி. 10:13).**

ஆகவே, மனுஷருக்கு சோதனைகள் வருவது சகஜம் என்றும் அதனால், சோதனையில் நீ விழாதபடிக்கு, திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்பட தேவன் இடங்கொடுக்கமாட்டார் என்றும் அறிகிறோம். ஏனெனில், தேவன் உண்மையுள்ளவர் என்று வாசிக்கிறோம். இங்கு இடையில் தேவன் உண்மையுள்ளவர் என்ற வார்த்தை **அவர் நமக்கு உதவி செய்ய அக்கறையுள்ளவர்** என்ற அர்த்தம் தருகிறது. தனக்கு சந்ததி உண்டாகும் என்று சொல்லப்பட்ட சாராள் முதலில் நகைத்தாள். பின்பு, அது வரையில் அற்புதமாக வழிநடத்திய தேவனின் செயல்களை அவள் எண்ணிப்பார்த்து தேவனிடம் விசுவாசம் வைத்த படியினால், **வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று எண்ணி கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து வயது சென்ற வளாய் இருந்தும் பிள்ளை பெற்றாள்** என்று வாசிக்கின்றோம் (எபி. 11:11). நாமும் நம் வாழ்க்கையில் சோர்ந்து போகாமல் நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (I கொரி. 1:9) என்பதையும் இதுவரை நம்மை நல்லபடியாக வழிநடத்தி வந்த அவர் மீது விசுவாசம் வைக்கும்போது, அது எவ்வளவு பெரிய பிரச்சனையாய் இருந்தாலும் அதை நிச்சயமாக தேவன் தீர்த்து வைக்கிறார்.

தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்று குறிப்பிடக் காரணம் என்ன? ஏனெனில், மனுஷர் நம் கஷ்டங்களைக் கண்டும் காணாதது போல இருக்கலாம். ஆனால், தேவன் அப்படிப் பட்டவரல்ல. நம் சோதனையில் தப்பிக்கொள்ளும்படி உதவியும் செய்கிறார். மனுஷன் சுய இச்சையினால் சோதிக்கப் படுகிறான் என யாக்கோபின் எச்சரிக்கையை மனதில் வைத்து, நாம் தேவனிடம் ஜெபித்து, கிறிஸ்துவின் பலனைப் பெற்று, நம் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும். சோதனையில் விழாதபடி ஜெபிக்க ஆண்டவரும் நமக்கு வலியுறுத்துகிறார்.

சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்று ஏன் யாக்கோபின் நிருபம் சொல்கிறது? காரணம், தேவன் சோதனை யோடுகூட தப்பிக்கொள்ளும்படியான போக்கை உண்டாக்கு வதால் அந்த ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கிறது. **எரிகிற அக்கினி சூளைக்கு எங்கள் தேவன் தப்புவிக்க வல்லவர் என்று** மூன்று எபிரெய வாலிபர்கள் சக்கரவர்த்தி நேபுகாத்நேச்சார் முன் தைரியமாய் அறிக்கையிட்டதை நாம் அறிவோம். ஆம், நம் விசு வாசத்துடன் தைரியமும் இணைந்து செயல்பட வேண்டும் (2பேதுரு 1:5) சோதோம் கொமோரா பட்டணத்தாரின் அக்கிரமக் கிரியைகளைக் கண்டு நாள்தோறும் தன் இருதயத்தில் வாதிக்கப் பட்ட லோத்தை தேவன் அக்கறையாக இரட்சித்தார் (2பேதுரு 2:7-10). உன் இருதய வேதனைகளை தேவன் அறிந்தவராய், இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார் என்று அறிந்து நிம்மதி கொள்.

கோதுமையை சுளகினால் புடைக்கிறது போல சத்தான் உங்களை புடைக்க உத்தரவு கேட்டாலும் உன் விசுவாசம் ஒழிந்து போகாமல் இருக்க உன் ஆண்டவர் ஜெபிக்க சித்தமாயிருக்கிறார் (லூக்கா 22:31,32). எனவே தான், அவர் நம் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார். ஆனால் நீ செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு. அது பாவத்திற்கு எதிர்த்து நிற்பது. அதாவது, நீ பாவத்தில் விழுந்து விடாதபடி சூழ் நிலையையும் மனுஷரையும் எதிர்த்து நிற்பது (எபி.12:1-4). சோதனையில் விழாதபடி காக்க தேவன் ஆயத்தமாயுள்ளார். நீ பாவத்தை எதிர்க்க ஆயத்தமா? என்பதே நமக்கு முன்பாக உள்ள கேள்வி. இந்த உலகமும், பிசாசும் நீ பாவம் செய்ய சகல வசதிகளையும் செய்து தருகிறது. தேவனுடைய வார்த்தை மாத்திரமே இந்தப் பொல்லாத உலகத்திலிருந்து நம்மைக் காக்க வல்லது அதற்காகத்தான் நாம் சபைகூடி வந்து தேவ வார்த்தைகளைக் கற்றுக் கொள்கிறோம்.

எனவே, சபை கூடுதலுக்கு யாரையும் குறை சொல்லி தவற விடாதே! நீ தேவசமூகத்தில் காணப்பட்டால் தான் இந்த பொல்லாத பிரபஞ்சத்திற்கும் பிசாசின் தந்திரங்களுக்கும் தப்ப முடியும்! உன்னை சபை கூட விடாதபடிக்குக் கூட சூழ்நிலையை

பிசாசு உண்டாக்கலாம். ஜாக்கிரதை! நாம் மனுஷருக்காக அல்ல தேவனுக்காகக் கூடுகிறோம். நம்மைப் பாவத்திலிருந்து காத்துக் கொண்டால் தான் சபையாரை நாம் நேசிக்க முடியும். அதற்கு அப்போஸ்தலர் உபதேசமும், அப்பம் பிட்குதலும், ஜெபம் பண்ணுதலும் அவசியமாகிறது. கிறிஸ்துவின் குணாதிசயங்கள் நமக்குள் உருவாகவே நாம் சபை கூடி வருகிறோம். மற்றவரால் நீங்களோ, உங்களால் மற்றவர்களோ இடறல் அடையாதபடி ஜாக்கிரதையாயிருங்கள்.

அநேக உபத்திரவங்களின் வழியாக நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தில் நிலைத்திருக்க வேண்டியுள்ளது [அப். 14:22]. எனவே, நாம் மற்றவர்களின் பெலவீனங்களைப் பார்த்து விழுந்து போகாமல் தேவ பக்தியாய் வாழ்ந்து கர்த்தருக்கேற்ற பிரயாசப் பட வேண்டும் [Iகொரி. 15:58]. வேத வாசிப்பும், தனிப்பட்ட ஜெப வாழ்க்கையும் சோதனையை மேற்கொள்ள அவசியமாகிறது. உபதேசத்தில் தவறி நடப்பவர்களுக்கும், விபச்சாரக்காரருக்கும், உலக சிநேகங்களுக்கும் விலகியிருக்கும் பொறுப்பும் நமக்குள்ளது. நம்முடைய பெலவீனங்களில் உதவி செய்யவே ஞானஸ்நானத்தின் போது நமக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டுள்ளார் [ ரோமர் 8:26]. அவரை நம் தவறான பேச்சு, செயல்களால் நாம் துக்கப்படுத்தக் கூடாது [ எபே.4:29, யாக் 3:14-17]. சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார். (Iதெச. 5:23,24]. ஆமென். ★

## நாளும், நடப்பும்

- TNPSC குரூப் IV விண்ணப்பிக்க கடைசி தேதி 14.07.2019
- ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் கடைகள், வணிக நிறுவனங்களைத் திறந்து வைக்க தமிழக அரசு அனுமதி
- இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்வோருக்கும் தலைக் கவசம் கட்டாயம் –உயர்நீதி மன்றம்
- 25% இட ஒதுக்கீடு; 5 ஆயிரம் பள்ளிகளில் குலுக்கல் மூலம் மாணவர்கள் தேர்வு –பள்ளி கல்வித்துறை
- 12-வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன